உ

சிவமயம். 381

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஜம்புநாதசுவாமிநே நம:

686

திருவானைக்கா
அல்லது
ஜம்புகேசுவரமான்மியசாரம்.

இஃது

திரிசிரபுரம்

மு. நாகரத்நம்பிள்ளையால்

இயற்றப்பட்டு

ஷை ஸ்தல தர்மகர்த்தரவர்களாகிய

கானாடுகாத்தான்

ஸ்ரீமாந். சா. ரா. ம. சிதம்பரஞ்செட்டியார்

அவர்களால்

திரிசிரபுரம்

"டாட்ஸன்பிரசில்" பதிப்பிக்கப்பட்டது.

:(○):

குரோதிஸு மார்கழி மீ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜம்புபதியேநமஃ.

ஜம்புகேசுவரமாந்மியசாரம்.

காப்பு.

நிலம்போற்றும் பனிக்கிரண நிலாவணிந்த நாயகனார் நிருதர் வாழுஞ்
சலம்போற்று மதில்பொடித்த ஞான்றினிய பூசனைகள் சால வாற்றிப்
புலம்போற்று மெய்யடியார் விநாயகனென்றியம்புபதப்பொருளை நாட்டி
வலம்போற்று மணியிரத மூர்ந்தமழ விளங்களிற்றை வணக்கஞ்செய்வாம்.

ஸ்ரீபரமேசுவரர் உலகத்தில் புண்ணிய பூமியென்று புகழ் பெற்றுவிளங்கும் ஜம்புதீபமாகியபரதகண்டத்தில் ஆன்மாக்கணிமித்தம் அருள் செய்யும்பொருட்டுச் சிவலிங்கப்பெருமானுயெழுந்தருளிய சிவக்ஷேத்திரங்களிற் சிறந்த ஞானக்ஷேத்திரமாகவும், பஞ்ச ஸ்தலங்களுள் ஒன்றான அப்புஸ்தகமாகவும், சோழமண்டலத்தில் புலவர்களால் புகழும் காவிரி கொள்ளிடம் என்னுமிரு நதிகளுக்கு மத்தியிலுள்ளதாயும் வைதீக சைவசித்தாந்த சமயாசாரிய சிவாவதார ஸ்ரீஜகத்குருமூர்த்திகளாகிய ஸ்ரீஜ்ஞானசம்பந்தாதிகள் அருளிய திராவிடவேதசம்பந்தமாகவும், விராட்புருடனுக்கு மணிபூரக ஸ்தானமாகவும், அருணகிரிசுவாமிகள் திருப்புகழ் பெற்ற ஸ்ரீசுப்பிரமணியசுவாமி ஸ்தலமாகவுமுள்ள ஜம்புகேசுவரமென்கிற திருவானைக்காவென்னும் ஞானதலத்தில் சிவபெருமான் எழுந்தருளியடியார்களுக்குத் திருவருள் சுரந்துத்திருவடிப்பேறருளிய மாந்மியசாரம் வருமாறுஃ—

சோழநாட்டில் நீர் வளப்பத்தையுடைய காவிரி, கொள்ளிடம் என்னுமிரு நதிகளின் மத்தியில் வெண்ணாவல் விருட்சங்கள் அடர்ந்த வனமொன்றுண்டு. அவ்வனத்தில் தவம்செய்யும் முனிவர்களுள் ஒருவராகிய ஜம்புமுனிவர் தவம்செய்துவரும் நாட்களில் ஒருநாள் அதி அற்புதமான ஒரு நாவற்பழம் ஒன்று அவர் முன்விழ, அதை யெடுத்துப்பார்த்து இது முழு முதற்கடவுளாகிய பரமசிவனுக்கேயுரியது என, கைலாசத்துக்குச்சென்று சிவஞானச்சுடரைத்தரிசித்து இப்பழத்தைத்திருவமுதுசெய்தருளுமெனப் பிரார்த்தித்து நின்றனர். சுவாமி அவர் அன்புக்கிரங்கி திருவமுதுசெய்து கொட்டையை ஒரு பக்கத்தில் உமிழ்ந்தார். திவ்விய தேஜோமயமாய் விளங்கிய பிரசாத உச்சிட்டமாகிய கொட்டையையெடுத்து அம்முனிவர், இது திருவடிப்பேறு அடைய பரமஅவுழ்தமெனக்கருதியுட்கொண்டு நின்றவுடன் அக்கொட்டையிலிருந்து முளைகிளம்பி மண்டையைத்திறந்து பெரியவிருட்சமாய் நின்றது. சிவபெருமான் முனிவரைப் பார்த்து இவ்விருட்சத்தைத் தாங்கிக்கொண்டு ஜம்பு வனத்திலேயே தவம் செய்யும் என்றும் அவ்விருட்சத்தின்கீழ் யாம் எழுந்தருளுவோம் என்று திருவாய் மலர்ந்தருளினர். அம்முனிவரும் விடைபெற்றுக்கொண்டு இவ்வனத்திற்குவந்து தவம்செய்து கொண்டிருந்தனர். திருக்கைலாசத்திலே உமாதேவியார் ஞானோபதேசஞ்செய்ய பரமேசுவரன் திருவருள்புரியுமெனத் திருவாய்மலர, சுவாமியம்மையாரைப்பார்த்து, ஜம்புமுனிவர் தவவனத்தில் சென்று யோகத்திலிருந்து எம்மைத்தெரிசித்தால் அவ்விடம் எழுந்தருளி ஞானோபதேசம் செய்வோமெனத் திருவாய்மலர்ந்தவுடனே அம்மையாரும் தக்ஷிண திசையை நோக்கிச்சென்று ஞானதலத்தையடைந்தபொழுது அத்தலத்தில் தவம் செய்யும் பிரம்மதேவர் அகிலாண்டநாயகியைத்தெரிசித்துத் தோத்திரம் செய்து என்னம்மையே தேவரீர் இவ்விடத்தில் எழுந்தருளக் காரணம் என்ன என்று கேட்க, அம்மையாரும் பரமசிவத்தை ஞானோபதேசம் செய்யப் பிரார்த்தித்தோம் அதற்குச்சுவாமி ஞானதலத்திற் சென்று தவம் செய்யின் ஞானோபதேசம் செய்வோம் என்று திருவாய்மலர, அதன்பொருட்டு இவ்விடம் எழுந்தருளினோம் என்று அருளிச்செய்தார். அம்மையார் காவிரிமுதலிய தீர்த்தமாடி நித்தியானுஷ்டானம்முடித்து ஆலயம்நிருமித்துப் பூசைக்குரியவைகளைச்சேகரித்து, பிரம்மதீர்த்தத்திற்கருகேசென்று பிரமனை யழைத்துப்பூசைபுரிய சிவலிங்கம் ஒன்றுசிருஷ்டித்துத்தருக என்றருள, பிரமதேவர் சகலசராசரங்களையும் பெற்றதாயே உன்னால் அறியப்படாததும், செய்யப்படாததும் உண்டோ என்றுதுதி

செய்தனர். அம்மையார் அத்தீர்த்தத்தில் ஜலத்தையெடுத்து லிங்கமாகச் செய்து ஜம்புமுனிவர் நிழல் கொடுத்து நிற்க, விதிப்படிபூசைசெய்து துதித்து போகத்திலிருக்க ஜோதிமயமாய்த் தரிசனங்கொடுத்துவிளங்கி ஞர் பரமேசுவரர். ஜோதிமயமாய் விளங்குங் கடவுளைப் பார்த்துச் சுவாமி இத்தலத்து எழுந்தருளிய உமக்கு அமிர்தலிங்கேசரென்றுத் திருநாமம் உண்டாகவும் தெரிசித்தோர் சிவத்தோடு இரண்டறக்கலக்க வம், வரந்தந்து எனக்கு ஞானோபதேசம் செய்தருளும் என்றுதிருவா ய்மலர, அமிர்தலிங்கேசர் விரும்பிய வரமனைத்தையும் கொடுத்து, திருவருட்பிரசாதமும் சத்திநிபாதமும்பெற்ற சித்தாந்திகளுக்கேச் சிற ந்த சைவசித்தாந்த சாஸ்திரத்தின் உட்பொருளாய் விளங்கும் பதிபசுபாச த்தை யெடுத்தோதி தம்பக்கலிலேயே யிருக்கச்செய்தனர். ஜம்புமுனி வர் தம்முட்கருத்துநிறைவேறிற்று என்று அமிர்தேசரைத்துதித்து இத்த லத்துக்கு ஜம்பேசுவரமென்றும் தேவரீருக்கு ஜம்புலிங்கம் என்றும் திருநாமம் உண்டாக மிகக்களிப்புடன்கேட்டவரத்தை ஜம்புலிங்கேசரும் கொடுத்தருளினர். அம்முனிவரும் நிழல் திருப்பணி செய்து வருகிறார் நாளதுவரையில்.

அங்கு தவம்செய்த பிரமதேவர் ஜம்புலிங்கத்தைத் தரிசித்துப் பூசைசெய்து, சுவாமி வேதமூர்த்திபே யுமக்குத்திருவிழாப்புரியவும் என் பெயர்கொண்ட தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோர் வேண்டிய வரம் அ டையவும்வரந்தரவேண்டும் என்று பிரார்த்தித்தார். பிர்மதேவர் வேண் யபடிவரத்தைக் கொடுத்தருளின உடன் திருவிழா நடத்த ஆரம்பித்து மாசியீ கார்த்திகை நட்சத்திரத்தில் சகலசம்பிரமத்துடன் காவிரிக்குச் சென்று மண்கொண்டு வந்து முளைப்பாலிகையிட்டு அடுத்த ரோகணியி ல் ரிஷபமெழுதிய படத்தைப் பூசித்து மிருகசீரிடத்தில் சோமாஸ்கந்த மூர்த்தியை யெழுந்தருளச்செய்து கொடியேற்றி, அந்த நாள் சாயந்திர முதல் ஆறும் நாள் காலை யீறாக பத்து காலத்தும் ஸ்ரீ விநாயகக் கடவுளுக் கும், ஸ்ரீமுருகக்கடவுளுக்கும்திருவிழாச்செய்தும், ஆறும் நாள் சாயந்திர முதல் ஒன்பதாம் நாள் காலையீறாக ஆறுகாலத்தும் சமயாசாரியசுவாமிகளு க்குத் திருவிழாச்செய்தும், ஒன்பதாம்நாள் சாயந்திரமுதல் பன்னிரண் டாம் நாள் காலையீறாக ஆறுகாலத்தும் ஸ்ரீகல்யாண சுந்தரருக்குத்திருவி ழாச் செய்தும், பன்னிரண்டாம்நாள் சாயந்திரமுதல் பதினேழாம் நா ள் காலையீறாக ஓமாக்கினிவளர்த்து அஷ்டதிக்பந்தனஞ்செய்து பலியிட்டு

அத்திரதேவருக்குத் திருவிழாச்செய்து, பத்துகாலத்தும் வேறு வேறு வாகனத்தோடு விளங்க சந்திரசேகரருக்குத் திருவிழாச் செய்தும், அப் பதினேழாம் நாள் சாயந்திரத்தில் ரிஷபமெழுதிய படம் எட்டுக்குவிதிப் படி பூசைசெய்து, பதினெட்டாம் நாள் ஜம்புலிங்கேசர் எதிர் நிற்க அவ்வெட்டுக்கொடியையும் எட்டுதிக்கிலே ஏற்றி அந்த நாள் சாயந்திரம் முத்துப்பந்தலின் கீழ்சுவாமியையும் அம்மையாரையும் எழுந்தருளச்செய்து, பத்தொன்பதாம் நாள் சுவாமிககுப் பூதவாகனம், அம்மனுககுக் கிளிவாகனம், இருபதாம் நாள் சுவாமிக்கு கற்பக விருக்ஷம், அம்மனுக்கு சேஷவாகனம், இருபத்தொன்றும் நாள் சுவாமிக்குக் கைலாச வாகனம், அம்மனுக்கு அன்ன வாகனம், இருபத்திரண்டாம் நாள் சுவாமிக்கும் அம்மனுக்கும் ரிஷபவாகனம், இப்படியாக வாகனத்தில் எழுந்தருளச்செய்து அடியார்கள் தரிசிக்கத் திருவிழாச்செய்தும், இருபத்து மூன்றும் நாள், ஸ்ரீஜம்புநாதர், ஸ்ரீஅகிலாண்டநாயகி, ஸ்ரீவிநாயககடவுள், ஸ்ரீகந்தர் ஸ்ரீசண்டேசர் இவர்களைத்தனித்தனி ரதத்தில் ஆரோகணித்துத் தேவர்களிக்க பூசரர் வேதம் ஒலிக்க, அடியார்கள் துதிக்க ஹர ஹர எனுமொலிமுழங்க ரதமோட்டி நிலை நிறுத்தியும் பேரின்பசாகரத்தில் களித்து இருந்தனர் பிரமதேவர். இருபத்து நாலாம் நாள் சுவாமி நந்திவாகனத்திலும், அம்மன் சிங்கவாகனத்திலும், இருபத்தைந்தாம் நாள் சுவாமி குதிரை வாகனத்திலும், அம்மன் ஆந்தோளியிலும், இருபத்தாறும் நாள் சுவாமி ஈராயிரம் கொம்பையுடைய ஐராவணமென்னும் யானைவாகனத்திலும் அம்மன் சிவிகையிலும் திருவிழாச்செய்துமகிழ்ந்தார் கலைமகள்நாயகர். இருபத்தேழாம் நாள் காலையில் தரிசனம் கொடுத்து பிர்மதீர்த்தத்தில் தீர்த்தம்கொடுத்து அத்தீர்த்தத்தில் அன்று ஸ்நானஞ்செய்து நித்தியானுஷ்டானங்களை முடித்தோர் வேண்டியவரங்களைக்கொடுத்து அருளினர் பசுபதியாகிய ஜம்புலிங்கேசர். அன்று சாயந்திரம் எட்டுக்கொடியையும் இறக்கி இருபத்தெட்டாம்நாள் சாயந்திரமுதல் முப்பதாம் நாள் சாயந்திரம் ஈறாக மூன்று காலத்தும் சிவிகையில் பள்ளியறைச்சொக்கருக்குத் திருவிழாச்செய்தும், முப்பத்தொன்றும்நாள்முதல் மூன்று நாள் மௌனத்திருவிழாச்செய்தும், முப்பத்துநான்கா நாள் முதல் மூன்று நாள் சண்டேசருக்குத் திருவிழாச்செய்தும், மற்றக்கொடிகளையிறக்கி முப்பத்தேழாம் நாள் பஞ்சப்பிராகாரத்திருவிழாச் செய்தும் முப்பத்தெட்டாநாள் விடாயாற்றித்திருவிழாச்செய்தும், வருஷந்தோறும் இப்படியே நடத்திவரும்படி ஜம்புலிங்கபிரபுவைப் பிரார்த்தித்துத்

தமது இருப்பைச்சேர்ந்திருந்தனர் நான்முகத் தேவர். இம்முப்பத்தெட்டு நாளோடு முளைப்பாலிகை யொருநாள், கொடிப்பூசை யொருநாள் ஆக நாற்பது நாள் ஆகிற படியால் இதை மண்டலோற்சவமெனச் சொல்லப்படும். திருவாரூரிலும் மண்டலோற்சவம் நடந்து வருகிறது.

அயோத்திநகர் அரசராகிய தசரதர் புத்திரர் இராமர் என்பவர் இராவணனைக்கொன்ற பாபத்தை இராமேசுவரத்தில் சிவபூசைசெய்து போக்கிக்கொண்டு, கும்பகர்ணனைக் கொன்றபாவத்தை ஜம்புலிங்கத்தைப்பூசைசெய்து நீக்கிக்கொண்டு தம்பெயரால் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து அயோத்திக்குச்சென்று சுகப்பேறு அடைந்தார். மூர்த்திக்கு நீலவிண்டீசர் என்றும் தலத்துக்கு நீலவிண்டீச்சுவரம் என்றும் பெயருண்டாயிற்று. இராமர் கட்டிய மண்டபத்திற்கு இராம மண்டபமென்று பெயர். அதுசந்திரசேகரமூர்த்தியெழுந்தருளிய மண்டபமென்று சொல்லுகிறார்கள். பராசரர் விசுவாமித்திரர் அனுப்பிய அரக்கனுருவெடுத்த பூதத்தால் தமதகப்பனார் சத்தியிறந்துபோக ஞானத்தலத்தையடைந்து ஜம்புலிங்கத்தைப் பூசைசெய்து தந்தையை முத்தியிற்சேர்ப்பித்து யாகம் வளர்த்து அரக்கரைக்கொன்று நிருதியுலகத்திலுள்ள அப்பூத உருவான அரக்கனை அமிர்தேசனுக்கு வாகனமாக்கினார். சுவாமியும் ரிஷபவாகனரூடராய்த்தோன்றினார். அவ்வரக்கன்மேல் இரக்கம் வந்து வாகனமாகச் செய்பென்று அசரீரி வாக்குண்டாயினமையால் சுவாமிக்குப்பஸ்சாத்தாபேசர்என்னும் திருநாமம் வழங்கிவரும்படி வரமபெற்று தமமிடம் சென்று சுகவாழ்வெய்தியிருந்தனர்.

பஸ்சாதாபேசர்கிய சமபுநாதர் திருவருள் பெற்று அயோத்திக்குச்சென்ற ஸ்ரீராமர் பட்டாபிஷேகஞ் சூட்டிக்கொண்டு விபூஷணனுக்கு இக்ஷ்வாகு முதல் முப்பத்தைந்து தலைமுறையாக ஆராதனம் செய்து வந்த திருமால் எழுந்தருளிய விமானத்தைக் கொடுத்து இலங்கைக்குச்சென்று சிரஞ்சீவியாய் வாழக்கடவாய் என்று ஆசிர்வதிக்க, விபூஷணனும் விடைபெற்றுக்கொண்டு இலங்கைக்குச்செல்லுகையில் காவிரியின் அழகைக்கண்டு விமானத்தை யிறங்கிப் பூசை முடித்து போஜனஞ் செய்து இலங்கைக்குசசெல்ல, விமானத்தைத்தூக்க, அது அசையாமை கண்டு மனவருத்தமடைந்து அயருங்காலத்து விஷ்ணுதேவர் கனவில் ஞானதலமாகிய ஜம்புகேசுவரத்து எழுந்தருளிய ஜம்புலிங்கப் பெருமானுக்குப் பத்திசெய்து திருவருள் பெறுவேன் என்று கட்டளையிட விபூஷணனும் விடை பெற்றுக்கொண்டு

இலங்கைக்குச்சென்று அரசாண்டு சுகவாழ்வெய்தினன். அப்பால் விமானத்துள் எழுந்தருளிய விஷ்ணு சம்புநாதரை ஆராதித்துத் திருவருள் பெற்றனர்.

உறையூரிலரசாண்ட ஒரு சோழன் தன் மனைவியணிந்திருந்த முத்துமாலையை அமிர்தேசருக்குச் சாற்றி மகிழநினைத்து மனைவியுடன் காவிரிக்குச்சென்று தீர்த்தமாடும்போது முத்துமாலைத் தவறி விழுந்துவிட்டது. தீர்த்தமாடியபின் நாயகி கழுத்தில் முத்துமாலை யில்லாமலிருத்தலைக்கண்டு வருந்தினன் அரசன். சம்புநாதருக்கு வழக்கம்போல் திருமஞ்சனம் காவிரியினின்று எடுத்துக்கொண்டுபோய் அபிஷேகம் செய்யுங்காலத்தில் முத்துமாலைக்குடத்திலிருந்து விழுந்து சுவாமிக்கு ஆரமாயிருந்ததைக்கண்ட அர்ச்சகர், முத்துமாலைக்கு வருந்திய அரசனிடம் தெரிவிக்க அரசனும் அதிக மகிழ்ச்சியடைந்து அமிர்தேசரைத்துதித்துச்சிவப்பேறு எய்தி வாழ்ந்தனன்.

கைலாயத்துள்ள சிவகணங்களிற்சிறந்த சம்புமாலி, புட்பதந்தர் என்னும் இருவர் தங்கள் சிவபூசையில் ஒருவருக்கொருவர் மேம்படக் கருதிப்பொறாமைகொண்டு ஜம்புமாலி, புட்பதந்தரைப்பார்த்துச்சிலந்தியாகெனவும், புட்பதந்தர் ஜம்புமாலியைப்பார்த்து வெள்ளையானையாகெனவும் சபித்துக்கொண்டு, இருவரும் வருத்தமுற்று சுவாமியிடஞ் சென்று நடந்த வரலாற்றை பிரஸ்தாபித்தார்கள். சுவாமி யிவர்கள் சிவபத்தியை யுலகினருக்கு அறிவிக்கும் பொருட்டு ஞானதலத்திற்போய் எம்மை யாராதித்தால் சாபம் நீங்குமென்றருள, ஜம்புமாலியும் வெள்ளையானையாகத் திருவெள்ளரைக்கடுத்த ஆனைகாவில் உதித்து திருப்பைஞ்ஞீலிநாதரை யாராதித்து சக்கரம் பெற்றவராகிய திருவெள்வரையில் உள்ள புண்டரீகாக்ஷப்பெருமாளைப் பூசை செய்துவரும் நாட்களில் ஒருநாள் இரை கிடைக்காமலிருந்ததைக்கண்டுத் தெற்குநோக்கிகொள்ளிடத்தைக்கடந்து வரும்போது வெண்ணாவலின்கீழ் எழுந்தருளிய சம்புநாதரைத் தரிசித்து பத்திரபுட்பம் காய்கனி இவைகளைக்கொண்டுவந்து பூசைசெய்யத் தொடங்கிற்று. புஷ்பதந்தர் சிலந்தியாக வெண்ணாவல்மரத்தில் தங்கி ஒருநாள் கீழே யிறங்கும்பொழுது சம்புநாதரைத்தரிசித்து மிக்க களிப்புடன் ஆலயமில்லாதிருக்கிற சுவாமிக்கு நூலால் ஆலயம் செய்து சிவபக்தி நடத்திவரும்போது யானை வந்து நூலாலயத்தை யழித்துச் சிவபூசை நடத்திவருவது வழக்கம். சிலந்தியும் விடாது ஆலயம் செய்துவருவது இதன் வழக்கம். இப்படிப் பலநாள் யானைசெய்து

வருவதைக்கண்டறிய சிலந்தி சுவாமியின் திருவுருவத்திலிருந்து யானை பூசைக்கு ஆரம்பித்து அபிஷேகம் செய்யும்போது துதிக்கைத்துவாரத்தில் நுழைந்து மண்டையில்போயிருந்துகொண்டு தனது கோபத்தைக் காட்ட யானை வீறிட்டுக் கீழேவிழ சுவாமி தெரிசனங்கொடுத்து யானைக் கூச்சாபத்தைத் தீர்த்துக்கைலைக்கு அனுப்பிச், சிலந்திக்குஆலயம் செய்கிற விருப்பமிருந்தபடியினால் சோழராஜன் வயிற்றில் உதித்து ஆலயத் திருப்பணி செய்வாய் என்று அனுக்கிரகஞ்செய்தருளினர். ஜம்புலிங்கேசர் அருளியபடியே சிதம்பரத்தில் அரசாண்ட சோழராஜன் வயிற்றிலுதித்து கோச்செங்கணர் என்னும் பெயர்பூண்டு திருவானைக்காவுக்குச்சென்று சுவாமியைத் துதித்துத் தெய்வத்தச்சனால் கண்டகிநதியில் செய்துவைத்திருந்த விமானத்தைக் காவேரிவழியாகக் கொண்டுவந்து தெற்குமுகமாக வாசற்படியையும், மேற்குமுகமாகப் பலகணியையும் வைத்துப் பிரதிஷடைசெய்து அதைச்சுற்றிலுமுள்ள மண்டபங்களை சேரபாண்டியர்களைச் சேர்த்துக்கொண்டு கட்டி மீந்த திரவியங்களைச் சுவாமிககு வடமேற்கு மூலையில் புதைத்து மேலே மண்டபங்கட்டி அதன்மேல் சிவலிங்கப்பிரதிஷடை செய்து ஆதிப்பெரும்செல்வர் எனத் திருநாமம் வைத்து ஆறுகாலம் விதி வழாது பூசை செய்வித்து சிலநாள் சிவபக்தி செய்து தனதூரையடைந்து நீதியாய் அரசாண்டு உலகத்துள்ள சிவாலயத்திருப்பணி செய்வதே தொழிலாயும் சிவஞானச்செல்வராயுமிருந்து சிவத்தோடு இரண்டறக் கலந்தனர்.

தவசிரேஷ்டராகிய கவுதமர் என்பவர் தம் மனைவியிடம் காமநோயால் விரும்பிவந்த இந்திரனைக் குறியுமுகி மண்ணில் விழச்சபித்தும் மனைவியாகிய அகலிகியைக் கல்லாகெனச் சபித்தும் தம் தவத்தைக் குறைவரச்செய்து வரும நாட்களில் ஒரு நாள் காம நோயால் வருந்தித் துன்பமடைந்தார். இது பாவம் என்று கருதித் திருவானைக்கா என்னும் ஞான தலத்துக்கு வந்து காவேரி முதலிய தீர்த்தமாடிக் கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பல மலர் கொய்து அமிர்தலிங்கேசரை விதிப்படிப் பூசித்துத்துதித்து நிற்கச் சுவாமியும் பிரசன்னமாகி, இராமரால் சாபம் நீங்கி யுன் மனைவி யுன்னிடம் வருவாள் அதன் பின் இருவரும் சேர்ந்து சுகமாயிருப்பீர்கள் என்றும், அதுவரையில் நம்மை யாராதித்துக்கொண்டியிருவென்றும் திருவாய் மலர்ந்தருளி மறைந்தருளினர். அப்படியே சாபம் நீங்கி அகலிகைக் கவுதமரிடம் வர இருவரும் பிரமேசனிடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் இருப்பிடம் சென்று சுக

மாய் வாழ்ந்திருந்தார்கள். கவுதமருக்குச் சுகமாயிருக்கச் செய்தமையால் சுவாமிக்கு சங்கரேசர் என்று பேருண்டாயிற்று,

திரேதாயுகத்தில் பிரமதேவர் சிருஷ்டித்தொழிலைச் சங்கரேசரை யாராதித்துப் பெற்றமையால் பிரமேசர் என்றும் பிரமலிங்கம் என்றும் பெயருண்டாயிற்று. குபேரன் தன்னுடைய செல்வமனைத்தையும் இராவணன் கொண்டுபோயினன் என்று ஞானதலமாகிய திருவானைக்காவுக்கு வந்து சங்கரேசராகிய நாவல் மரத்துக்கு கீழ் எழுந்தருளிய துரியப்பொருளை ஆராதனஞ்செய்து தன் பேரால் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து ஞானமூர்த்தியாகிய முத்திநாதரைத் துதித்து நின்றனர். வேதங்களில் நாலாவது பொருள் என்று விளங்கிய பச்சாத்தாபேசர் வெளியேத்தோன்றித் தரிசனங்கொடுத்து இராமரால் இராவணன் தன் செல்வத்தை யிழக்கப்பட்டு மண்ணுலகை விடுவன் என்றும் அப்பொழுது உனது செல்வம் உன்னிடம் வந்தவுடன் இருப்பிடம் சென்று வாழ்வாயென்றும் திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். அருளியபடியே செல்வத்தைப்பெற்று குபேரசம்பத்தை யடைந்து சுகமாயிருந்தனன்.

சிவபக்த சிகாமணியாகிய கோச்செங்கணர் முதலானவர்கள் மண்டப முதலிய மதில்களைச்செய்து வரும்போது ஐந்தாவது மதிலையாம் செய்வோம் மற்றத்திருப்பணிகளைச் செய்து நிறைவேற்றுங்கள், என்று அசரிரி வாக்கு ஒன்று கேட்க அரசர் முதலாயினரும அவ்வாக்கைக் கேட்டதிசயித்துக்கூடிய சீக்கிரம் திருப்பணி யெல்லாம்முடித்துக்கொண்டு ஐந்தாவது மதிலைத் திருப்பணி செய்யாதுத் திருவருளுக்கு எதிர் பார்த்திருந்தார்கள். நாவல் மரத்து நிழலில் எழுந்தருளிய தியானிக்கப்படுபொருளாகியும் விஷ்ணு முதலிய சகல ஆன்மாக்களாகிய பசுக்களுக்குத் தலைவராயுமிருக்கிற பசுபதி சித்தர் திருவுருவெடுத்து வந்து வேலை செய்யும் ஆட்களுக்கு விபூதி கொடுத்து ஐந்தாவது திருமதிலாகிய விபூதி மதிலைக் கட்டுவித்து மறைந்தருளினர். கோச்செங்கணர் முதலிய சிவபக்தர்கள் திருவருளை வியந்துத் துள்ளிக்குதித்தும் ஆடியும் பாடியும் மயிர்க்கூச்சலடைந்தும் அம்மதிலை வலம் வந்து ஹர ஹர வென்றுமொலி கடலொலி யென முழக்கிப் பேரானந்தமடைந்தார்கள். இத்திருமதிலை வலம் வருவோர் செல்வம் கல்வி ஞானம் புத்திரப்பேறு முதலிய பெருமைகளை யடைவார்கள். வலம் வர அடியெடுத்து வைத்தாலும் நினைத்தாலும் சகல ஐசுவரியத்தையும் அடைவார்கள். பஞ்சப்பிரகாரத் தன்று பஞ்சாட்சர தியானத்துடன் ஐந்து பிரகாரத்திலும் வலம் வருவோர் சிவயோக சிவ ஞானச்செல்வராய் வாழ்வார்கள்.

சமயாசாரியசுவாமிகளால் தேவாரப்பதிகங்களில் புகழ்ப்பட்ட கோச்செங்கட் சோழநாயனாரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீபரமேசுவரர் பஞ்சமுகோற்பவர்களும், சகலவருண அதிதர்களும் ஜகத்குருமூர்த்திகளும் சிவத்துவிஜர். சிவாசாரியர் எனப்பெயர்பெற்றவர்களுமாகிய ஆதிசைவர்கள் வேதசிவாகமவிற்பன்னர்களாய்ச் சிவபக்திமுதலிய ஆசாரசீலர்களாய் ஸ்ரீஜம்புபதியையும் ஸ்ரீஅகிலாண்டேசுவரியையும் விதிதவறாது அர்ச்சித்துவரும் நாட்களில் அரசர் பணிகேட்கும் நிலைமையிலிருந்தமையாலும். எது செய்யினும் யாவராலும் கேட்கக்கூடாதிருந்தமையாலும் இவர்கள் அகங்கரித்துச் செருக்குற்று, இப்பெருமை யாவும் ஜம்புபதியை ஆராதிக்கின்ற சிவபுண்ணியத்தால் வந்ததென்று அறியாதவர்களாய்த் தவறுகளே புரிந்திட்டுக் கணிகையர்தம் இன்பமே பேரின்பமெனக் கொண்டு நாஸ்திகர்களாய்ச் சிவதிரவியங்களைக் கொள்ளையடித்தும் சிவாராதனமுதலிய புறப்பாடுகளைக் காலதாமதஞ்செய்தும் தங்கள் ஆசாரசீலங்களினின்று வழுவியும், மணிபாட்டல் வாயால் முணுமுணுத்தல் அன்றிச் சிவபெருமானுக்கு உபசாரஞ்செய்யாது பிழைகள் பலசெய்து வந்தார்கள். மெய்யருக்கு மெய்யரும் பொய்யருக்குப் பொய்யருமாயிருந்து அநுக்கிரகஞ்செய்யும் பரங்கருணைத்தடங்கடல் அண்ணலாரும், சர்வவியாபகருமாகிய ஸ்ரீ ஜம்புநாதர், மனதில் கள்ளத்தனமே குடிகொண்டு இவ்வாறு நடந்துவரும் ஆதிசைவர்களை (கோயில் பூசை செய்யும் குருக்கள்மார்) ஆழமான நதியில் வீழ்த்துவதே நலமெனத் திருவுள்ளத்தில் கோபித்து நினைத்திருந்தார். அப்பொழுது இவ்வாதிசைவர்கள் ஜம்புநாதர் பூசைக்கு ஓர் சிறுவனைமாத்திரம் வைத்துவிட்டுக் கொள்ளிடம் என்னும் நதியின் வடகரையில் பிச்சாண்டார்கோயில் திருவிழா தரிசனார்த்தமாக மனைவிமக்களுடன் புறப்பட்டு நதியருகேசென்று ஓடமேறி நடு ஆற்றில் வரும்சமயத்தில் வெண்ணாவல் நிழலிலிருக்கும் எமது பெருமான் திருவருளால் சுழல்காற்றடித்து ஓடம் கவிழ நதிவெள்ளத்தில் மனைவிமக்களுடன் வீழ்ந்து உயிர்மடிந்தார்கள். உலகத்திலுள்ளார் சிவாபராதம் செய்தோர் இவ்வாறு ஆவரென அச்சங்கொண்டு இது சிவபெருமான் திருவருளே ஒருவர்மீதும் குற்றம் சாற்ற ஒண்ணாதென உறுதிகொண்டார்கள். சிவதர்மபரிபாலகர்கள் திருவருள் சம்மதமாய்ப் பூசைக்கு வைத்த அச்சிறு ஆதிசைவருக்கு வேதசிவாகமங்களைக் கற்பித்து விதிமுறை தவறாது சிவபணிவிடைசெய்துவர வைத்தார்கள். இப்பரம்பரையார் இன்னும் இருக்கின்றார்கள். திருப்பிடவூரிலுள்ள பூர்வசிகாபிராமணோத்தமர்களை அழைத்துக்கொண்டுவந்து ஸ்தாபித்தார்கள். இவர்களுள் அறிவிற் பெரியாராகிப் பத்திவழுவாச் சிந்தையுடையவர் சிலரைப் பூசையாதி செய்வதற்குரியாரென்றும் ஜம்புநாதர் திருவருள் சுரந்தனர். அச்சமும் அன்பும் தாங்கி வேதசிவாகமிரண்டினாலும் மூன்று லோகத்

தாரும் அதிசயிக்கும் வண்ணம் பூசைசெய்துவரும் இப்பிராமணர்களை ஜம்புநாதரென்றேவணங்கினவர்கள் தேவர்களால் வணங்கப்படுவார்கள்

இத்திருவானைக்காப்புராணச்சுருக்கம் ஒருவாறு வெகுவிரைவில் நிறைவேறிற்று. இத்தலப்புராணம் வடமொழியில் ௧௫ அத்தியாயத்திலும் ௨௭ அத்தியாயத்திலும் இருக்கிறது. தமிழில் திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள் இயற்றியிருக்கின்றனர்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

இத்தலத்துள்ள தீர்த்தங்கள்.

௧. இந்திர தீர்த்தம்
௨. பிரம தீர்த்தம்
௩. சம்பு தீர்த்தம்
௪. அக்கினி தீர்த்தம்
௫. அகத்திய தீர்த்தம்
௬. சோமத்தீர்த்தம்
௭. இராம தீர்த்தம்
௮. சோம தீர்த்தம்
௯. சூரிய தீர்த்தம்

குழீஇயிருந்த சுற்றங் குணங்கள் பாராட்ட
வழீஇயிருந்த வங்கங்க ளெல்லாங்—தழீஇயிருந்து
மென்னனைக் காவா விதுதகா வென்னமுன்
றென்னனைக் காவடைநீ சென்று.

"வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

அருள்வளர்சம்புமூலத் தமுதலிங்கேசர்வாழ் க
வருமகிலாண்டவல்லி வாழ்கவேதாகமத்தி ன்
பொருணிலைவழாதுவாழ்க புகழ்திருவானைக்காவா ங்
திருநகர்வாழ்கவாழ்க தேயங்களனைத்துமா தோ.

திருச்சிற்றம்பலம்.

முற்றும்